
## திராவிடத்தால் வாழ்கிறோம்

**1193**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

**குமரன்தாஸ்**

**60**

திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.

# சமதர்மத்தின் பக்கம் நின்ற நியாயத் தராசு!



‘நியாயத் தராசு’ திரைப்படம் இதுவரை தமிழ்த் திரைப்பட உலகம் பார்த்திராத ஒரு கதையினைப் பேசிய திரைப்படமாகும்.

அதாவது, நக்சல்பாரி இயக்கத்தில் சேர்ந்து இயங்கும் ஒரு பெண் (பாரதி), உழைக்கும் மக்களை, அதிலும் குறிப்பாக ஆதிவாசிப் பெண்களைக் கொடுமைப்படுத்தி வன்புணர்வு செய்து, நாய்களை ஏவிவிட்டு கொலை செய்யும் கொடிய பண்ணையாரை, தமது கட்சியின் கொள்கைப்படி அழித்தொழித்துவிட்டு சிறை செல்கிறாள்.

தன் தாயாரின் உடல் நலமின்மையை முன்னிட்டு, 14 நாட்கள் பரோலில் வெளியே வரும் அவளை, இச்சமூகமும் அவளது குடும்பமும் எவ்வாறு எதிர்கொண்டு அணுகுகிறது என்பதே ‘நியாயத் தராசு’ திரைப்படத்தின் கதையாகும். இப்படியொரு தமிழ்த் திரைப்படம் இதற்கு முன் வந்ததில்லை.

இதனை, படத்தின் தொடக்கத்திலேயே கலைஞர் திரையில் தோன்றி எடுத்துச் சொல்வார்.

**கலைஞர்:** “வணக்கம். என் உயிரினும் மேலான அன்பு உடன் பிறப்புகளே, வணக்கம். நியாயத் தராசைக் கையில் ஏந்தி நெஞ்சில் உறுதிகொண்டு நிற்கும் ஒரு பெண்ணின் கதை இது. இருட்டில் இருந்தவள், கொஞ்ச நாட்களே வெளிச்சத்திற்கு வருகிறாள். அந்த வெளிச்சம் இருட்டைவிட மோசமானதாக இருக்கிறது. வெளிச்சத்தில் கோட்டான்கள், ஆந்தைகள், வௌவால்கள், கழுகுகள், காண்டாமிருகங்கள்... மீண்டும் இருட்டு உலகமே இனிமையானது என்ற முடிவுக்கு வருகிறாள்.

பெண்மை என்றால் மென்மை. ஆம், அவள் மென்மையான ரோஜா மலர்தான். அவளைச் சுற்றியிருந்தோர் அவளை ரோஜா மலர் என்று கூறவில்லை. ரோஜா முள் என்றே சபித்தனர்.



அவள் சிலருக்கு முள்ளாகத் தான் இருந்தாள். ஆனால், நியாயத் தராசின் முள்ளாக இருந்தாள். அந்த ஒருத்தியின் கதையை இயக்குநர் ராஜேஸ்வர் மிகவும் புதிய முறையில் படமாக்கிட, தம்பிகள் அழகப்பன், வேதா இருவரின் ‘மேனகா பிக்சர்ஸ்’ பெருமையுடன் வெளியிடுகிறது.

என் எழுத்துத் துறையிலும், இதுவொரு புதிய திருப்பம். எனக்கு மிகுந்த மனநிறைவான திரைக்காவியம், இந்த ‘நியாயத் தராசு’ என்று கூறுகிறார்.

இதற்கேற்ப, படம் முழுதும் கலைஞரின் நீண்ட வசனங்கள் இல்லாவிட்டாலும், சிறிய தராசு முள் போன்ற வசனங்கள் அனைத்து ஆதிக்கத்திற்கும் எதிராக, நீதியின் பக்கம் நின்று பேசுகிறது. எடுத்துக்காட்டாக, ஒரு காட்சியில் பண்ணையார் பரமானந்தம் (விஜயன்) ஆதிவாசிகளுக்கான அரசு அலுவலகத்திற்குள் வந்து அதிகாரம் செய்கிறான். அவனைக் கண்டு அதிகாரிகள் நடுங்குகின்றனர்.

அதைக் கண்டு கோபம் கொள்ளும் அரசு அலுவலரான பாரதி, ‘இது ஆதிவாசிகள் நலத்துறை ஆபீஸ், ஆதிவாசிகள் அடிமை ஆபீஸ் அல்ல. மன்னர் மானியம் ஒழிந்துவிட்டது. ஆனால், தர்பார் இன்னும் ஒழியவில்லை” என்கிறாள். அதற்குப் பரமானந்தம் ‘அந்தப் புரங்களும் ஒழியவில்லை’ என்று நக்கலாகச் சொல்லிச் சிரித்தவாறே செல்கிறான்.

மற்றொரு காட்சி, பாரதி ஆயுதப் போராளியாக மாறக் காரணமான புரட்சிமணி (மு.க. முத்து), இரவில் தமது தோழர்கள் மத்தியில் பேசும் காட்சியில்...

**புரட்சிமணி :** பண்ணையார் பரமானந்தம் தண்டிக்கப்பட வேண்டும். ‘இமயமலை சாய்ந்ததுபோல் வீழ்ந்துவிட்டான் ஜார் அரசன்’ என்று பாடினானே முண்டாசுக் கவிஞன், அந்த ஜார் மன்னனைவிடப் பெரியவனா இந்தப் பண்ணையார் பரமானந்தம்? கொலைவாளினை எடடா எனப் புரட்சிக் கவிஞர் பாடியது பொல்லாத செயல்களைச் சாகடிக்க, நாம் இந்தப் பொல்லாதவர்களையே சாகடித்துவிட்டால்..? என்று புரட்சிமணி பேசுகிறான். இப்பேச்சைக் கேட்டுத்தான் பாரதி ஆயுதப் போராளியாக மாறி, பண்ணையாரைக் கொலை செய்கிறாள்.



ஆனால், அதே புரட்சி மணி பின்னாளில் புரட்சிகர அரசியலைத் துறந்து, ஆடம்பர வாழ்வை மேற்கொள்வதுடன், பணக்காரப் பண்ணையார்களுக்கும் எஸ்டேட் முதலாளிகளுக்கும் ஆதரவாக நீதிமன்றத்தில் வாதிடும் வழக் கறிஞராக மாறி விடுகிறான்.

> **கலைஞரின் ‘நியாயத் தராசு’ பண்ணையாதிக்கத்திற்கும் ஆணாதிக்கத்திற்கும் எதிரான ஒரு புரட்சிக் காவியம்.**

பரோலில் வந்த பாரதி, ‘நியாயத் தராசு’ பத்திரிகை நிருபர் தாளமுத்துவுடன் சென்று புரட்சிமணியைச் சந்திக்கின்றாள்.

புரட்சிமணியிடம் உரையாடுகின்றனர்...

**தாளமுத்து (நிழல்கள் ரவி) :** எனது பெயர் தாளமுத்து

**புரட்சிமணி:** இந்தப் பெயரை எங்கேயோ கேள்விப்பட்டிருக்கின்றேனே...

**தாளமுத்து:** மொழிப் போராட்டத்தில் தியாகியானவருடைய பெயர் என்கிறான்.

**புரட்சிமணி:** ஓ... ஆமா, கடந்த காலத்தில் நானே மேடையில் பேசியிருக்கிறேன் என்கிறான்.

**தாளமுத்து:** எதற்காக நீங்கள் தீவிரவாதி ஆனீர்கள்?

**புரட்சிமணி :** மக்களின் அறியாமையையும், ஏழை, பணக்காரன் என்ற வேறுபாட்டையும் வறுமையையும் ஒழித்து, சமதர்ம சமுதாயத்தைப் படைக்கத்தான்.

**தாளமுத்து :** தீவிரவாதத்தை எப்போது கைவிட்டீர்கள்?

**புரட்சிமணி :** ஆறு வருடங்கள் ஆகிவிட்டது.

**தாளமுத்து :** ஓ... சமதர்ம சமுதாயம் வந்துவிட்டதா?

**புரட்சிமணி :** எப்ப கடல் வற்றுவது, நாம் கருவாடு சாப்பிடுவது?

**தாளமுத்து:** ஒருவேளை இன்னும் தாமதமாக நீங்கள் தீவிரவாதத்தை விட்டு வெளியேறியிருப்பீர்களேயானால் இன்னும் பலரைக் கொலை செய்யத் தூண்டியிருப்பீர்கள் அப்படித்தானே?

**புரட்சிமணி :** பேசியது எனது தலைவிதி, செய்தது அவர்களது தலைவிதி.

**பாரதி :** உங்கள் புரட்சிமணி என்ற பெயரையும் மாற்றியிருக்கலாம், இப்போது உங்களிடம் மணி (MONEY) மட்டும்தானே உள்ளது என்று சொல்லிவிட்டுச் செல்கிறாள்.

இவ்வாறாக, படம் முழுதும் கலைஞரின் கூர்மையான வசனங்கள் நிறைந்த படமாக ‘நியாயத் தராசு’ உள்ளது. இத்திரைப்படத்தில் கலைஞரின் நோக்கம் ஆயுதப் போராட்டத்தைக் கேலி செய்வதோ கொச்சைப்படுத்துவதோ அல்ல. மாறாக, இளைஞர்களைத் தூண்டிவிட்டு பண்ணையார்களை அழித்தொழிக்கச் செய்து குற்றவாளிகளாகச் சிறையில் வாட விட்டு விட்டு, தாம் மட்டும் சுக போக வாழ்க்கை வாழும் ஏமாற்றுப் பேர்வழிகளை அம்பலப்படுத்தும் நோக்கத்துடனேயே இவ்வசனங்கள் எழுதப்பட்டுள்ளன.

அதே சமயம், பண்ணையாதிக்கத்திற்கும் அவர்களது அடாவடிச் செயல்களுக்கும் எதிராகக் கலைஞர் மிகத்தீவிரமான வசனங்களையும் படத்தில் எழுதியுள்ளார் என்பது, கலைஞர் சமதர்மத்தின் பக்கமாகவே நின்று வசனங்களை எழுதியுள்ளார் என்பதையும் புரிந்துகொள்ள முடிகிறது. ஆக, கலைஞரின் ‘நியாயத் தராசு’ பண்ணையாதிக்கத்திற்கும் ஆணாதிக்கத்திற்கும் எதிரான ஒரு புரட்சிக் காவியமாகும்.

**...காட்சி விரியும்**

## தி.மு.கழகம் வாளாவிருக்காது!

தமிழ்நாட்டில் புதிய ஆட்சி அமைந்துள்ள சூழலில், அரசியலமைப்புச் சிக்கல் ஏற்படாமலும், தமிழ்நாட்டில் ஆளுநர் ஆட்சி அமைய விடாமலும் தடுத்த சக்தி தி.மு.க.தான் என சமூக வலைதளங்களில் அரசியல் விமர்சகர்கள் கருத்துப் பகிர்ந்துள்ளனர். பத்திரிகையாளர் அ.த.பாலகிருஷ்ணன் எழுதியுள்ள முகநூல் பதிவில், “ஆளுநர் ஆட்சி என்பது பா.ஜ.க. ஆட்சிதான். அதைவிட இது பரவாயில்லை என்றுதான் இடதுசாரிகள், வி.சி.க. இந்த முடிவை எடுத்திருப்பார்கள். மு.க.ஸ்டாலினிடம் விவாதித்த பிறகே இந்த முடிவை எடுத்திருக்கிறார்கள். அவர் சொல்லித்தான் எடுத்தார்கள் என்று கூற முடியாது.

இவர்கள் இதைச் செய்த முறைக்கும், காங்கிரஸ் செய்த முறைக்கும் மலைக்கும் மடுவுக்குமான வேறுபாடு உள்ளது. இந்திய அளவில், இனி காங்கிரஸுக்கு நண்பர்களைப் பெறுவது கடினமாக இருக்கும்.

தவிர, கடைசி மாநில அரசை கம்யூனிஸ்டுகளும், ஒரே மாநில அரசை தி.மு.க.வும் இழந்துள்ள நிலையில், இந்திய அரசியல் மிகவும் சிக்கலான காலகட்டத்தில் நுழைந்துள்ளது.

அரசியல் உத்தி, தேர்தல் உத்தி, அணி திரட்டல் ஆகியவற்றில் புதிய எதார்த்தங்கள் முகிழ்த்துள்ளன. அடிப்படை விழுமியங்களைப் பேணுகிற கட்சிகள், இனி ஒருநாள்கூட வாளா இருக்க முடியாது. அவர்கள் உத்தியிலும், அணி திரட்டலிலும் உள்ள குறைகளை நீக்கி பாய்ச்சலைக் காட்ட வேண்டும். இது தேர்வல்ல; கட்டாயம்” எனப் பதிவிட்டுள்ளார்.

தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றில், எல்லா விதமான சிக்கலான காலகட்டங்களிலும் முன்னிலை சக்தியாக இயங்கிய, இயங்கிக் கொண்டிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம், தற்போதைய சூழலிலும் ஆக்கபூர்வமாகச் செயல்படும். அதைக் கழகத் தலைவரின் தொடர் செயல்பாடுகள் உறுதி செய்யும்.

## ஃப்ளாஷ்பேக்





‘கோல்டன்’ பஷீர்

### வாழ்வின் மகிழ்ச்சியான தருணங்கள்!

1986-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 63-வது பிறந்தநாள் அன்று, கோபாலபுரம் இல்லத் துக்குச் சென்று, நம் தானைத் தலைவரைக் கண்டு மகிழ்ந்து, பிறந்தநாள் வாழ்த்துகள் தெரிவித்துக் கொண்டதுடன், நானும் வாழ்த்துப் பெற்று மகிழ்ந்தேன். தலைவரைக் கண்டு மகிழ்ந்த ஒவ்வொரு தருணமும் வாழ்வின் நிறைவான நாட்கள் என்றால் மிகையில்லை.

**– ‘கோல்டன்’ பஷீர், அமைப்பாளர்,
கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை,
வந்தவாசி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### அமெரிக்காவில் அண்ணா!

13.4.1968-இல் அமெரிக்காவின் அழைப்பின் பேரில், அந்நாட்டுக்குப் பயணப்பட்டார் அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணா. அமெரிக்காவுக்குச் செல்லும் வழியில், ரோமில் போப்பையும், பாரிஸில் மால்கம் ஆதிசேஷய்யாவையும் சந்தித்து, நியூயார்க் சென்றார். அப்போது கென்னடி விமான நிலையத்தில், இந்தியத் தூதர் ஜி.பார்த்தசாரதி, உயர் அதிகாரிகள், ஏராளமான தமிழர்கள் குழுமி அண்ணாவுக்கு வரவேற்பு அளித்தனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900